**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

## DEPOSITION OF WITNESS

**CC.No. 312/2022**

PW-4

| | | | |
|---|---|---|---|
| Name | அம்சவேணி(PW4) | | |
| Husband's Name | செல்வராஜ் | தொழில் | |
| Village | சேவூர் | | |
| Taluk | அவிநாசி | Age | 39 |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th **day of August 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை:-**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து வருகிறேன். செல்வராஜ் எனது கணவர் ஆவார். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு என் கணவர் சதீஷ்குமார் இடம் ரூபாய் 5000 கடன் வாங்கி இருந்தார். அதில் நான்காயிரம் ரூபாயை கொடுத்து விட்டார். மீதி ஆயிரம் ரூபாயை சாயந்திரம் கொடுப்பதாக சொல்லிவிட்டு என் கணவர் வந்துவிட்டார். ஒருநாள் இரவு 07.30 மணி அளவில் நானும் என் கணவரும் குழந்தைகளுடன் ஊருக்கு சென்று இருந்த போது நவீன் குமார் எனக்கு போன் செய்து சபரீஷ் மீதி ஆயிரம் ரூபாயை கேட்டு மிரட்டியதாக சொன்னார். நானும் என் கணவரும் ஊரில் இருந்து வரும் வழியில் சதீஷ் குமார் வீடு இருப்பதால் அங்கு சென்று சதீஷ்குமார் இடம் செல்வராஜ் நான் தான் பணம் கொடுக்கிறேன் என்று சொன்னேனே என் அக்கா மகனை ஏன் மிரட்டினாய் என்று கேட்டார். சதீஷ்குமார் தகாத வார்த்தைகளால் பேசி சத்தம் போட்டார். நான் குழந்தைகளுடன் இருந்ததால் சண்டையை விலக்கி விட முடியாமல் என் நங்கையா மகன்கள் பிரதீப் குமார் மற்றும் நவீன் குமாருக்கு போன் செய்து அந்த இடத்திற்கு வர சொன்னேன். அவர்கள் இருவரும் வந்து சதீஷ்குமார் இடம் கேட்டார்கள். சண்டையை விலக்கிவிட்டு எங்களை அவர்கள் இருவரும் அழைத்து வரும்போது சபரீஷ் என் கணவரை அடித்து உதைத்தார். சபரீஷ் எங்கிருந்தோ ஒரு கம்பியை எடுத்து வந்து என் வீட்டுக்காரரை அடிக்க போனார். அவர் விலகியதில் இடது காதின் அருகே நவீன் குமாருக்கு அடிபட்டுவிட்டது. அடித்து விட்டு எதிரிகள் இருவரும் அங்கிருந்து ஓடி விட்டார்கள். நாங்கள் ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து அன்னூர் பழனிச்சாமி மருத்துவமனைக்கு நவீன் குமாரை அழைத்து போய்

சிகிச்சைக்கு சேர்த்தோம். மருத்துவமனையில் இருந்து காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நவீன் குமாரை பழனிசாமி மருத்துவமனைக்கு அழைத்து சென்றபோது அவர் மயக்க நிலையில் இருந்தார். அந்த மருத்துவமனையில் நவீன் குமாரை சிகிச்சைக்கு எடுத்துக் கொள்ளவில்லை அதன் பின்பு எஸ்எம்எப் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். ஆம்புலன்ஸ் எத்தனை மணிக்கு வந்தது என்றால் எட்டு மணிக்கு மேல் வந்தது. என் கணவர் கொடுக்கல் வாங்கல் விபரத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். என் கணவர் கொடுக்க வேண்டிய பணத்தில் இருந்து தப்பித்து கொள்வதற்காக என் கணவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |